සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**87 | T | I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2015 දෙසැම්බර්**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2015 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2015**

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය **I, II**
**தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் I, II**
Communication and Media Studies **I, II**

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

## தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் I

**கவனிக்க :**
(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** 'சுட்டிப்பயலின் குறும்புத்தனங்கள்' நாவலை வாசித்தபோது அந்த நாவலின் சிறுவர் பாத்திரங்கள் தம்மைத் தமது சிறுபராயத்திற்கே எடுத்துச் சென்றதாக, நாவலை வாசித்த பலரின் கருத்துக்கள் இருந்தன. இவ்வாறான அனுபவம் பெறப் பிரதானமாக அமைவது
(1) சிறு குழுத் தொடர்பாடல்
(2) பெரும் குழுத் தொடர்பாடல்
(3) ஆட்களிடைத் தொடர்பாடல்
(4) ஆளுள் அல்லது அகமுகித் தொடர்பாடல்

**2.** முதலில் கற்பிக்கப்பட்ட பாடமொன்றின் தகவலானது கரும்பலகையிலிருந்து முழுமையாக அழிக்கப்படாதது, புதிய பாடத்தின் வரைபடமொன்று அதே கரும்பலகையில் வரையப்பட்டபோது அது தெளிவற்றதாக இருந்தமைக்குக் காரணமாக அமைந்தது. இது
(1) மொழிசார் தடை
(2) ஊடகத் தடை
(3) தொழினுட்பத் தடை
(4) காட்சித் தடை

**3.** வானொலி வழியாக நேயர்களுடன் உரையாடும் ஓர் அறிவிப்பாளர்
(1) இலக்குவைக்கப்பட்ட பெறுநர்களை மனதில் காட்சிப்படுத்திக்கொண்டு உரையாடுகிறார்.
(2) சமூகப் பன்மைத்தன்மையுடன் அனுசரித்துச் செல்கிறார்.
(3) நண்பர்களுடன் கலந்துரையாடுவது போல நடந்துகொள்கிறார்.
(4) தனியாட்களுடன் பேசுவது போல உணர்ந்துகொள்கிறார்.

**4.** இலங்கையின் முதலாவது செய்திப்பத்திரிகை
(1) லங்காலோகய
(2) கொழும்பு ஜேர்னல்
(3) லக்மினி பஹன
(4) ஞானார்த்த பிரதீபய

**5.** செய்திப்பத்திரிகையில் இடத்தை (வெளியை) ஒதுக்கீடு செய்யும்போது முக்கிய கவனம் செலுத்தப்படுவது
(1) செய்திகளுக்கு
(2) விளம்பரங்களுக்கு
(3) ஆசிரியர் தலையங்கத்துக்கு
(4) முதற் பக்கத்திற்கு

**6.** உங்களது பாடசாலையின் ஊடகத்தினம் குறித்த விழாவில் நீங்கள் நிகழ்த்தவிருக்கும் சிறப்புரையின் இரு பக்கக் குறிப்பினை, சுமார் 400 பங்கேற்பாளர்களுக்கு விநியோகிப்பதற்கான, அச்சுப் பிரதிகளைப் பெறுவதற்கு சிறந்த வழிமுறை
(1) எண்மான பிரதியீட்டு அச்சிடல் (digital duplication)
(2) எதிரீட்டு அச்சிடல் (off - set printing)
(3) கணினிவழி அச்சிடல் (DTP)
(4) திரை அச்சிடல் (Screen printing)

**7.** வெற்றிகரமான திரைப்படம் ஒன்றின் அடிப்படைக் கட்டுமானம்
(1) தொழினுட்ப நவீனத்துவம்
(2) படத்தொகுப்பாக்கத்தின் ஒருசீர்மை
(3) தரமான எழுத்துரு
(4) தனித்துவமான நடிப்பு

**8.** குழுத்தொடர்பாடல் அல்லது கூட்டுத் தொடர்பாடலுடன் தொடர்புடைய **தவறான** கூற்றைத் தெரிவு செய்க.
(1) ஒரு தலைவரைக் கொண்டிருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும்.
(2) பொதுவான குறிக்கோளைக் கொண்டிருப்பது முக்கியமானது.
(3) ஆகக்குறைந்த அல்லது ஆகக்கூடிய உறுப்பினர் எண்ணிக்கை என்பதாக எதுவுமில்லை.
(4) முகத்திற்கு முகம் பிரசன்னமாயிருத்தல் தேவையற்றது.

[பக். 2 ஐப் பார்க்க

**9.** திரைப்பட ஊடகத்தின் படைப்பாக்கப் பண்புகளைப் புரிந்துகொள்ள முடிவது
(1) திரைப்படத்தை திரையரங்கமொன்றில் காண்பதன் வழியாக
(2) திரைப்படத்தை குறுந்தகடொன்றின் வழி காண்பதன் ஊடாக
(3) திரைப்படத்தைத் தொலைக்காட்சியில் காண்பதன் வழியாக
(4) திரைப்படத்தை இணையம்வழி காண்பதன் ஊடாக

**10.** ஒரு குழுவுக்கு, **ஆகக்குறைந்த** கால இடைவெளிக்குள் தகவலை முன்வைப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய பொறிமுறை
(1) வழுக்கி எறிவை (2) மேந்தலை எறிவை (3) பல்லூடக எறிவை (4) திரைப்பட எறிவை

**11.** வானொலி நாடகம் ஒன்றைச் செவிமடுக்கும்போது அதன் நிகழ்வுகள் எமது மனங்களில் காட்சிகளாக விரிகின்றன. இது அறியப்படுவது
(1) இருமைத்தன்மை என (2) கற்பனாத்தன்மை என
(3) உருவகப் பயன்பாடு என (4) சுய எண்ணக்கரு என

**12.** செய்திப்பத்திரிகையொன்றில் செய்தியொன்று அறிக்கையிடப்படும்போது மிக முக்கியமான தகவல் முதலில் முன்வைக்கப்படும். இது அழைக்கப்படுவது
(1) வன் செய்தி அறிக்கையிடல் என (2) தலைகீழ் பிரமிட் முறை என
(3) தலைப்பு எழுதுதல் என (4) புலனாய்வு அறிக்கையிடல் என

**13.** உலகளாவிய இணைய வலைப்பின்னலின் (World Wide Web) ஸ்தாபகர் எனக் கருதப்படுபவர்
(1) ரிம் பெர்னஸ் லீ (2) ஜோன் லொகி பெயார்ட்
(3) எட்வேர்ட் ஹாப்பர் (4) ஆதர் சி. கிளார்க்

**14.** பின்வரும் வழிமுறைகளில் ஆட்களிடைத் தொடர்பாடலில் உள்ளடக்கப்பட **முடியாதது** எது?
(1) கடிதமொன்றைத் தபாலிடுதல் (2) மின்னஞ்சல் கணக்கொன்றை ஆரம்பித்தல்
(3) கை குலுக்குதல் (4) குறுஞ்செய்தியொன்றை அனுப்புதல்

**15.** குறுந்தூர தொலைக்காட்சிச் சுற்றின் இலக்காக அமைவது
(1) வீடுகளுக்கு நேரடிச் சேவையை வழங்குவது
(2) உள்ளக மற்றும் வெளியகச் சூழலைக் கண்காணிப்பது
(3) தேசிய மற்றும் சர்வதேச சேவைகளை வழங்குவது
(4) கடந்த கால நிகழ்ச்சிகளைப் பார்வையிடும் வசதிகளை வழங்குவது

**16.** ஜெகன் புத்தகம் அச்சிடும் முகவரகமொன்றின் சரவைபார்ப்பவர் ஆவார். அவரின் முக்கிய பணியாவது
(1) கையெழுத்துப்பிரதிகள் பிரசுரிப்பதற்குப் பொருத்தமானவையாவெனப் பரிசோதிப்பது
(2) அச்சிட்ட பிரதிகள் நல்ல தரத்திலுள்ளனவா என்பதைப் பரிசோதிப்பது
(3) அச்சிட்ட பிரதியை கையெழுத்துப் பிரதியுடன் ஒப்பிட்டுப் பரிசோதிப்பது
(4) அச்சிடுதலுக்கு முன்பு பக்கங்களின் வடிவமைப்பை மேற்கொள்வது

**17.** திரைப்படப் பார்வையாளருக்கு அவசியமான மிகமுக்கிய கோட்பாடு
(1) பார்வைத் தொடர்ச்சி (2) காட்சியின் இயல்தன்மை (visual nature)
(3) தூர நோக்கு (4) காட்சித்தள ஆழம்

**18.** நாளைய தினத்தை எப்படிச் செலவழிப்பது எனச் சிந்தித்த பின்னர், காலையில் நூலகம் செல்வதெனவும் மாலையில் நண்பர்களுடன் திரைப்படமொன்றுக்குச் செல்வதெனவும் காவ்யா தீர்மானித்தாள். இந்தத் தீர்மானம்
(1) கூட்டுத் தொடர்பாடற் சந்தர்ப்பமாகும். (2) ஆட்களிடைத் தொடர்பாடற் சந்தர்ப்பமாகும்.
(3) வெகுசனத் தொடர்பாடற் சந்தர்ப்பமாகும். (4) ஆளுள் தொடர்பாடற் சந்தர்ப்பமாகும்.

**19.** ஒரு நிறுவனத்தின் செய்திமடல் (newsletter) அதிகம் உள்ளடக்குவது
(1) நீண்ட காலத்துவமுடைய முக்கிய கொள்கை ஆவணங்களை
(2) நிர்வாக அதிகாரபீடத்திலிருந்தான கட்டளைகளுடன் கூடிய அறிவித்தல்களை
(3) இலக்குகள், ஆதாயங்கள் மற்றும் இழப்புக்களைக் கொண்ட நிதிசார் ஆவணங்களை
(4) குறுகிய காலத்துக்கான தகவல்கள் மற்றும் எளிமையான அறிவித்தல்களை

**20.** சமூகத்தின் பல்வேறு நிகழ்வுகளை அதிகம் யதார்த்தபூர்வமாக எடுத்துக்காட்டுவது
(1) முழுநீளத் திரைப்படங்கள் (2) விவரணத் திரைப்படங்கள்
(3) பரிசோதனைத் திரைப்படங்கள் (4) மௌனத் திரைப்படங்கள்

**21.** விமானவிபத்தொன்று தொடர்பான தகவலை துரிதமாக அறிக்கையிட வேண்டியுள்ளது. குறித்த விமானத்தின் வகை, தயாரிப்பு வருடம் மற்றும் தொடர்புடைய தொழினுட்ப விபரங்களைப் பெற்றுக்கொள்ள மிக இயலுமான வழி
(1) விமான முகவரகத்திற்கு தொலைநகல் செய்தியொன்றை அனுப்புதல்
(2) விமானங்கள் பற்றிய நூல்களில் தகவல் திரட்டுதல்
(3) விமான நிபுணர் ஒருவருக்கு மின்னஞ்சலொன்றை அனுப்புதல்
(4) விமானக்கம்பனியின் இணையத்தளத்தில் பிரவேசித்தல்.

[பக். 3 ஐப் பார்க்க

22. பின்வருவனவற்றுள் **தவறான** கூற்றைத் தெரிவு செய்க.
(1) பேச்சுத்தொடர்பாடல் வாய்மொழியல்லாததாக இருக்க முடியும்.
(2) வாய்மொழித் தொடர்பாடலை பேச்சுவழிமூலம் முன்வைக்க முடியாது.
(3) வாய்மொழியல்லாத் தொடர்பாடலில் குரல் பயன்படுத்தப்பட முடியும்.
(4) எழுத்துத் தொடர்பாடல் வாய்மொழியாக அல்லது வாய்மொழியல்லாததாக இருக்கமுடியும்.

23. செவிப்புல - காட்சிப்புலப் படைப்புக்களில் செம்மையாக்கத்தின் அல்லது தொகுப்பின் மிக முக்கிய பயன்பாடு
(1) அர்த்தங்களைப் பெற்றுக்கொள்ளல்
(2) தொடர்ச்சித்தன்மையை (continuity) பேணுதல்
(3) சுருக்கத்தைத் தக்கவைத்தல்
(4) அவசியமற்ற செலவீனத்தைக் குறைக்க முடிதல்

24. துல்லியமான தகவலை அறிக்கையிடுவதில் ஊடகவியலாளருக்கான மிகப் பொருத்தமான மூலாதாரம்
(1) செய்தியாளர் மாநாடு (2) செய்திக்குறிப்பு (3) செய்தி நாட்குறிப்பேடு (4) செய்தி முகவரகம்

25. துண்டுப்பிரசுரங்கள் தொடர்பில் பின்வருவனவற்றுள் **தவறான** கூற்று
(1) இலவச விநியோகம்
(2) அளவில் சுவரொட்டியை ஒத்தது
(3) திகதி, காலம், இடம் அல்லது இலக்கை நினைவூட்ட அதிகம் பயன்படுத்தப்படுவது
(4) வாசிப்பின் பின்னர் சேகரித்தும் பாதுகாத்தும் வைத்திருக்கப்படாத அச்சு ஊடகம்

26. தொடர்பாடல் வடிவம் தொடர்பில் பாடசாலை ஊடகக் கழகத்தில் மாணவர்களால் முன்வைக்கப்பட்ட சில கூற்றுகள் வருமாறு
நீலன் : இது, இன்னொரு நபருடன் உரையாடும்போது, தன்னியல்பற்றதாக நிகழும் தொடர்பாடல் வழியாகும்.
மது : ஆட்களிடைத் தொடர்பாடல் உறவின் இயல்பை இதனூடாகப் புரிந்து கொள்ள முடியும்.
அருண் : இது பண்பாட்டுடன் இணைந்து காணப்படுவது.
மேற்கண்ட கலந்துரையாடலுடன் இணைந்த தொடர்பாடலாக அமைவது
(1) வாய்மொழி (2) வாய்மொழி அல்லாதது (3) எழுத்து (4) பேச்சு

27. "ஒவ்வொரு பிரஜையும் சுதந்திரமாகப் பேசவும், வெளியீடுகள் உள்ளடங்கலாக எண்ணங்களை வெளியிடவும் உரிமை கொண்டிருக்கிறார்" இக்கூற்று உள்ளடக்கப்பட்டிருப்பது
(1) மனித உரிமைகள் சாசனத்தில்
(2) இலங்கைப் பத்திரிகைச் சபை சட்டத்தில்
(3) இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பில்
(4) புலமைச் சொத்துச் சட்டத்தில்

28. தொடர்பாடலில் பிரதான இரண்டு குறுக்கீட்டு வகைகளாகக் கருதப்படுவன
(1) சூழல் மற்றும் மொழிசார் தடைகள்
(2) தொழினுட்ப மற்றும் உளம்சார் தடைகள்
(3) மொழிசார் மற்றும் ஊடகத் தடைகள்
(4) உடலியல் மற்றும் உளம்சார் தடைகள்

29. நிமலனுடன் சேர்ந்து கிரிக்கெட் ஆட்டமொன்றை பார்த்துக் கொண்டிருந்த விமலன், அது தொடர்பிலான உரையாடலை ஆரம்பித்தான். இங்கு,
(1) விமலன் ஒரு தொடர்பாளன் மாத்திரமே
(2) நிமலன் ஒரு பெறுநன் மாத்திரமே
(3) விமலன் ஒரு தொடர்பாளனாகவும் ஒரு பெறுநனாகவும் தனது வகிபங்குகளை இடைமாற்றிக் கொண்டார்.
(4) விமலன், நிமலன் ஆகிய இருவருமே தமது வகிபங்குகளை தொடர்பாளர்கள் மற்றும் பெறுநர்கள் என இடமாற்றிக் கொண்டனர்.

30. இந்த வரிப்படம் வழியாக எடுத்துக்காட்டப்படும் தொடர்பாடல்




(1) வாய்மொழி மற்றும் வாய்மொழி அல்லாதது
(2) எழுத்து, வாய்மொழி மற்றும் வாய்மொழியல்லாதது
(3) காட்சி, எழுத்து மற்றும் வாய்மொழி
(4) வாய்மொழி, வாய்மொழியல்லாதது, எழுத்து மற்றும் காட்சி

31. கீழ்வரும் மூன்று குழுக்களும், திரைப்படத் தயாரிப்பில் பங்கேற்கும் வேறுபட்ட நபர்களையும், சந்தர்ப்பங்களையும் கொண்டிருக்கின்றன.
A - இயக்குநர், ஒளியமைப்பு தொழினுட்பவியலாளர், ஒப்பனைக் கலைஞர்
B - கதை, எழுத்துரு தயாரிப்பு, எழுத்துரு தயாரிப்பாளர்
C - படத்தொகுப்பாளர், கிராபிக்ஸ் வடிவமைப்பாளர், பின்னணிக் குரல் தருபவர்
மேற்படி மூன்று குழுக்களும் கீழ்வரும் எதில் வரிசைக்கிரமமாக உள்ளடங்குகின்றன?
(1) முன் தயாரிப்பு, தயாரிப்பு, தயாரிப்புக்குப்பின்
(2) முன் தயாரிப்பு, தயாரிப்புக்குப்பின், தயாரிப்பு
(3) தயாரிப்புக்குப்பின், தயாரிப்பு, முன் தயாரிப்பு
(4) தயாரிப்பு, முன் தயாரிப்பு, தயாரிப்புக்குப்பின்

32. பின்வருவனவற்றுள் வெகுசன ஊடகங்களுடன் தொடர்புடைய அரச நிறுவனமாகக் **கருதப்படாதது**
(1) இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
(2) இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
(3) இலங்கை பத்திரிகைச் சபை
(4) தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

[பக். 4 ஐப் பார்க்க

**33.** பின்வருவோருள் உண்மையான கூட்டுத்தொடர்பாடல் நிகழக்கூடிய சந்தர்ப்பத்தைக் கொண்டவர்கள் யாவர்?
(1) வைத்தியசாலை விடுதியொன்றில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகள்
(2) இரயில் நிலையமொன்றில் கூடும் பயணிகள்
(3) வேலைநிறுத்தமொன்றில் பங்கேற்கும் தொழிலாளர்கள்
(4) நூலகமொன்றில் செய்திப்பத்திரிகை வாசிப்பவர்கள்

**34.** வானொலி செய்தி எழுத்துரு ஒன்றில் **உள்ளடக்கப்படக்கூடாத** அம்சம்
(1) விபரமான எண்ணிக்கை அடிப்படையிலான தரவு
(2) தகவலை உறுதிப்படுத்தக்கூடிய குரல் பதிவுகளின் பயன்பாடு
(3) ஒவ்வொரு விடயத்திற்கும் ஒவ்வொரு வசனம் பயன்படுத்தப்படல்
(4) நெருக்கமான, ஒரே வித உச்சரிப்புக்கொண்ட வார்த்தைகளைப் பயன்படுத்தாது விடுதல்

**35.** தனது சான்றிதழ்கள் வர்ணமிழந்து போவதை அவதானித்த ஜனனி அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் முறையொன்றைப் பற்றிச் சிந்தித்தாள். இது தொடர்பில் மிகப் பொருத்தமான வழியாக அமையக்கூடியது
(1) சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளைப் பெறுதல்
(2) அவற்றை லமினேட்டிங் செய்தல்
(3) ஒளிபடா வண்ணம் அவற்றைப் பாதுகாத்தல்
(4) அவற்றை புகைப்படமெடுத்து புகைப்படப் பிரதிகளாக்கிக் கொள்ளல்

**36.** செய்திகளைக் கட்டுப்படுத்தும் வண்ணம் ஓர் தகைசார் அதிகாரியை நியமிப்பதன் நோக்கம்
(1) செய்தி ஆசிரியருக்கு மேலதிகமாக ஒரு செய்திப்பத்திரிகை ஊடகவியலாளனை நியமிப்பது
(2) தெரிந்தெடுக்கப்பட்ட சில செய்திகள் பிரசுரமாவதைத் தடுப்பது
(3) ஊடக உள்ளடக்கங்களை, ஊடக உரிமையாளரின் ஆளுமையின் கீழ் கொண்டு வருவது
(4) சட்டவிரோதமான முறையில் செய்திகளைக் கட்டுப்படுத்துவது

**37.** தொடர்பாடல் சம்பந்தமான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - குரலும் வண்ணமும் குறியீட்டுத்தன்மை கொண்டவை. ஆனால், வார்த்தைகள் குறியீடுகளாகக் கருதப்படுவதில்லை.
B - உடற் பாங்கும் நிலைகளும் குறியீட்டுத்தன்மை கொண்டவை. ஆனால், கண் தொடர்பு அவ்வாறானதல்ல.
C - தோற்றமும் பார்வையும் குறியீட்டுத்தன்மை கொண்டவை. ஆனால், தொடுகை அவ்வாறானதல்ல.
மேற்படி கூற்றுகளில்
(1) A மாத்திரம் உண்மையானது.
(2) A யும் B யும் மாத்திரம் உண்மையானவை.
(3) A, B, C அனைத்தும் உண்மையானவை.
(4) A, B, C அனைத்தும் தவறானவை.

**38.** இலங்கை பத்திரிகைச் சபை
(1) அரசாங்க செய்திப்பத்திரிகை பிரசுரிக்கும் நிறுவனம்
(2) செய்திப்பத்திரிகை பதிவுமேற்கொள்ளும் நிறுவனம்
(3) பழைய செய்திப்பத்திரிகைகளை பாதுகாக்கும் நிறுவனம்
(4) செய்திப்பத்திரிகை விளம்பரங்களைப் பெறும் நிறுவனம்

**39.** பின்வருவன, சமீபத்தில் திரையிடப்பட்ட திரைப்படம் ஒன்று தொடர்பாக வகுப்பறையொன்றில் முன்வைக்கப்பட்ட சில அபிப்பிராயங்கள் ஆகும்.
ரவி : பிரதான கதாபாத்திரத்தின் வசனங்கள் திரைப்படத்தின் முடிவுக்கு மேலதிக வலுவைச் சேர்த்தன.
குரு : கள வடிவமைப்பு தத்ரூபமானதாகவும் கவருந்தன்மையுடனும் இருந்தது.
ரியாஸ் : பல காட்சிச் சட்டகங்கள், திரைப்படத்தின் அழகியலை வெளிப்படுத்துகின்றன.
தரணி : திரைப்படத்தின் வெற்றியானது சகல செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்த குழுத் தலைவரையே சாரும்.
மேற்படி கூற்றுகளின்படி, குறித்த வகிபங்குகளைச் செய்த நபர்கள் முறையே யாவர்?
(1) இயக்குநர், எழுத்துரு தயாரிப்பாளர், கலை இயக்குநர், ஒளிப்பதிவாளர்
(2) எழுத்துரு தயாரிப்பாளர், இயக்குநர், கலை இயக்குநர், ஒளிப்பதிவாளர்
(3) எழுத்துரு தயாரிப்பாளர், ஒளிப்பதிவாளர், கலை இயக்குநர், இயக்குநர்
(4) எழுத்துரு தயாரிப்பாளர், கலை இயக்குநர், ஒளிப்பதிவாளர், இயக்குநர்

**40.** பின்வரும் அட்டவணை சில கமெரா சட்டகங்களையும் காட்சிகளையும் உள்ளடக்கியுள்ளது.

| கமெரா சட்டகம் | காட்சி |
|---|---|
| 1. மிக அணுக்கப்படம் | A. பாராளுமன்றக் கட்டடத்தொகுதியின் முழுமையான காட்சி |
| 2. அணுக்கப்படம் | B. செய்திப்பத்திரிகை வாசிக்கும் ஒரு நபர் |
| 3. நடுத்தரப்படம் | C. வீட்டின் முன் நிறுத்தப்பட்டுள்ள வாகனம் |
| 4. நீண்ட தூரப் படம் | D. கண்ணீரால் நிரம்பியுள்ள குழந்தையொன்றின் கண்கள் |
| 5. மிக நீண்ட தூரப் படம் | E. தொலைக்காட்சி நிகழ்ச்சி அறிவிப்பாளர் ஒருவர் |

மேற்குறித்த கமெரா சட்டகங்களுக்குரிய பொருத்தமான காட்சிகளின் தெரிவு யாது?
(1) 1-A, 2-B, 3-C, 4-D, 5-E
(2) 1-D, 2-B, 3-E, 4-A, 5-C
(3) 1-D, 2-B, 3-E, 4-C, 5-A
(4) 1-D, 2-E, 3-B, 4-C, 5-A

[பக். 5 ஐப் பார்க்க

**

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**87 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2015 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சை, 2015 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2015**

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I, II
**தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் I, II**
Communication and Media Studies I, II

## தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் II

* **முதலாம்** வினாவையும் எவையேனும் **நான்கு** வினாக்களையும் தெரிவுசெய்து, மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* **முதலாம்** வினாவுக்கு **20** புள்ளிகளும் ஏனைய எல்லா வினாக்களுக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** நவீன், நிறுவனமொன்றின் தலைமைப் பொறுப்பில் இருப்பவராவார். அவரது அலுவலகம் தலைநகரில் அமைந்துள்ளது. தனது அலுவலகம் நவீன தொடர்பாடல் முறைகளைக் கொண்டிருப்பது அவசியம் என அவர் உறுதியாக நம்புகிறார்.

(i) அவரது 'நம்பிக்கை', எவ்வகைத் தொடர்பாடலின் அடிப்படையிலானது ?

(ii) அவரது நம்பிக்கை செயற்பாட்டிற்கு வருமானால் அவரது அலுவலகத்தில் இருக்கக்கூடிய **இரண்டு** நவீன உபகரணங்களைப் பெயரிடுக.

(iii) தனது நிறுவனத்தின் பணியாளர்களுக்கு உத்தியோகபூர்வமாக பொது அறிவித்தல்களை அறிவிப்பதற்கு நவீன் பயன்படுத்தக்கூடிய இலத்திரனியல் **சாராத** வழிமுறையொன்றைக் குறிப்பிடுக.

(iv) தனது நிறுவனத்தில் வருடாந்த அறிக்கையை வண்ணமயமாகவும் கவர்ச்சிகரமாகவும் அச்சிடுவதற்கு நவீன் எதிர்பார்க்கின்றார். இதற்கு மிகப் பொருத்தமான நவீன அச்சிடல் வழிமுறை எது ?

(v) எதிர்வரும் ஆண்டுக்கான நிறுவனத்தின் திட்டங்களைத் தனது சிரேஷ்ட நிர்வாக அதிகாரிகளுக்கு மாதாந்தக் கூட்டத்தில் முன்வைப்பதற்கு நவீன் எதிர்பார்க்கின்றார். இது தொடர்பில் அவர் பயன்படுத்தக்கூடிய **இரண்டு** எறிவை உபகரணங்களைக் குறிப்பிடுக.

(vi) தமது நிறுவனப் பணியாளர்களுடன் நல்லுறவைப் பேணுவதற்காக நவீன் பயன்படுத்தக்கூடிய **நான்கு** வாய்மொழி சாராத உடல்மொழி வழிமுறைகளைப் பெயரிடுக.

(vii) பணியாளர்களுக்கான கூட்டங்களில் உரையாற்றும்போது, அனைத்துக் குழுவினரையும் கவனத்திற் கொள்ளும் பொருட்டு சுற்றிவரப் பார்வையைச் செலுத்துவது நவீனுக்கு வழக்கமானது. குழுவினருக்கும் பேச்சாளருக்கும் இடையிலான இந்தத் தொடர்பை நாம் எவ்வாறு அடையாளப்படுத்தலாம் ?

(viii) தனது நிறுவனத்தில் அனைத்து முக்கிய தகவல்களையும் பெறும் நோக்குடன், முறைசாரா தொடர்பாடல் சங்கிலிகளையும் நவீன் பயன்படுத்துகிறார். நவீன் கவனஞ் செலுத்தக்கூடிய **இரண்டு** முறைசாரா தொடர்பாடல் சங்கிலிகளைப் பெயரிடுக.

(ix) புதிய வருடாந்த அறிக்கையை வெளியிடும் தினத்தில் ஊடகக் கவனக்குவிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு நவீன் எதிர்பார்க்கின்றார். இது தொடர்பில், அவர் பயன்படுத்தக்கூடிய **இரண்டு** வழிமுறைகளைப் பெயரிடுக.

(x) தனது நிறுவனத்தின் வளர்ச்சி தொடர்பிலான விவரணப்படமொன்றை உருவாக்க நவீன் எதிர்பார்க்கின்றார். இவ்வாறான படமொன்றின் பண்புகள் **இரண்டினைப்** பெயரிடுக.

**2.** ராஜா, செய்திப் பத்திரிகையொன்றை வாங்குவதற்காக வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில், சிவப்பு நிற சமிக்ஞையைக் கண்டதனால் அவர் தனது பக்கத்திலேயே நின்றுவிடுகிறார்.

(i) அந்தச் சமிக்ஞை எந்த தொடர்பாடல் வடிவத்தினுள் உள்ளடங்குகிறது ?

(ii) அவர் வாங்கிய செய்திப் பத்திரிகையின் முதற் பக்கத்தில் உள்ளடக்கப்படக்கூடிய **நான்கு** தகவல் கட்டமைப்புகளைப் பெயரிடுக.

(iii) வானொலி ஊடகத்திற்கான தகவல் அறிக்கையிடல் செய்திப் பத்திரிகையிலிருந்தும் வேறானது. அவ்வாறான **மூன்று** வேறுபாடுகளைத் தனித்தனியாக விவரிக்குக.

(iv) செய்திப் பத்திரிகை, வானொலி போன்ற வெகுசன ஊடகங்களுக்கான தகவல் அறிக்கையிடலில் பயன்படுத்தப்படும் **நான்கு** வேறுபட்ட மூலங்களைச் சுருக்கமாக விவரிக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

**3.** "இலத்திரனியல் ஊடகங்கள் அச்சு ஊடகங்களை விட அதிகம் வலுமிக்கவை" என்ற தலைப்பில் பாடசாலைகளுக்கிடையிலான விவாதப் போட்டியொன்று நடைபெற்றது.

(i) அச்சு ஊடக வகைகள் **இரண்டினைப்** பெயரிடுக.

(ii) இலத்திரனியல் ஊடகமொன்றைப் பெயரிட்டு, அச்சு ஊடகத்தில் காணப்பட **முடியாத** இலத்திரனியல் ஊடகத்தின் பலமெனக் கருதப்படும் அம்சங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(iii) விவாதத்தில் ஈடுபட்ட எதிர்த்தரப்பு "அச்சு ஊடகத்திற்குச் செய்தியை அறிக்கையிடுவதானது இலத்திரனியல் ஊடகத்தினை விட இலகுவானது" என்ற வாதத்தை முன்வைத்தது. அச்சு ஊடகத்திற்குச் செய்திகளை அறிக்கையிடும் 'தலைக்கீழ் பிரமிட்' முறையின் **மூன்று** அனுகூலங்களைச் சுருக்கமாக விளக்குக.

(iv) அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் இரண்டிற்கும் பொதுவான ஒழுக்கநெறிகள் **நான்கினைத்** தனித்தனியாக விவரிக்குக.

**4.** (i) "தொடர்பாடல் செயன்முறையில் தொடர்பாளன் மற்றும் பெறுநன் என அறியப்படும் இரண்டு திட்டமான நபர்கள் இருக்க வேண்டும்."

நீங்கள் மேற்படி கூற்றுடன் உடன்படுகின்றீர்களா ? உங்கள் விடைக்கான காரணத்தைத் தருக.

(ii) "செய்திப்பத்திரிகை விளம்பரத்திற்கான கட்டணம், அது செய்திப் பத்திரிகையில் எவ்விடத்தில் தோன்றவுள்ளது என்பதன் அடிப்படையில் மாத்திரமே தீர்மானிக்கப்படும்."

நீங்கள் மேற்படி கூற்றுடன் உடன்படுகின்றீர்களா ? உங்கள் விடைக்கான **இரண்டு** காரணங்களைத் தருக.

(iii) "சமூகத்திலுள்ள வெவ்வேறு பிரபல கதாபாத்திரங்களை விளம்பரங்களுக்குப் பயன்படுத்துவது வினைத்திறன் மிக்கது."

நீங்கள் மேற்படி கூற்றுடன் உடன்படுகின்றீர்களா ? உங்கள் விடைக்கான **மூன்று** காரணங்களைத் தருக.

(iv) "தொடர்பாடல் வகைகளில், செல்லிடத் தொலைபேசிகள் ஆட்களிடைத் தொடர்பாடலுக்கு மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றன".

நீங்கள் மேற்படி கூற்றுடன் உடன்படுகின்றீர்களா ? உங்கள் விடைக்கான **நான்கு** காரணங்களைத் தருக.

**5.** (i) இனிப்புகளுக்காகச் சிறுவர்கள் எவ்விதம் அவாப்படுகின்றனர் என்பதைப் பிரதானப்படுத்திய தொலைக்காட்சி விளம்பரங்களைக் கண்ணுற்ற ரஞ்சித், தனது அதிருப்தியைக் கடிதமொன்றின் மூலம் தொலைக்காட்சி அலைவரிசைக்குத் தெரியப்படுத்தினார். இந்தத் துலங்கலின் அடிப்படையில் அவர் எவ்வகையான பெறுநராகிறார் ?

(ii) வானொலியைக் கேட்பதன் மூலம் சிறார் நேயர்கள் தமது மொழியாற்றலை விருத்தியாக்க முடியும் என்பது மகேஷின் கருத்தாகும். இந்த வகையில், கற்றறியக் கூடிய **இரண்டு** மொழியியல் அம்சங்களைச் சுருக்கமாகச் சுட்டிக்காட்டுக.

(iii) பெறுநர்களின் துலங்கல்களை அறிவதன் அவசியத்தை நிர்மலா சுட்டிக்காட்டினார். பெறுநர் தொடர்பான ஆய்வுக்காகத் தரவுகளைத் திரட்டக்கூடிய **மூன்று** வழிமுறைகளைச் சுருக்கமாக விவரிக்குக.

(iv) விழிப்புணர்வுள்ள பெறுநராக வருவதன் அவசியத்தை கமல் சுட்டிக்காட்டினார். 'விழிப்புணர்வுள்ள பெறுநருக்கான தேர்ச்சிகள்' என்பது பற்றி, அத்தகைய தேர்ச்சிகள் **நான்கின்** அடிப்படையிலான **நான்கு** பந்திகளுடன் கூடிய சுருக்கமான கட்டுரை ஒன்றை எழுதுக.

**6.** பாலன், தனது பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்ததன் பின்னர் வெகுசன ஊடக நிறுவனமொன்றில் இணைய ஆவலாயுள்ளார்.

(i) இது தொடர்பில் அவர் விண்ணப்பிக்கக்கூடிய அரச வெகுசன நிறுவனங்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

(ii) செய்திப் பத்திரிகை நிறுவனமொன்றின் ஆசிரியர்பீட பதவிநிலை ஒன்றுக்கு விண்ணப்பிக்க பாலன் எதிர்பார்த்துள்ளார். இது தொடர்பில் அவர் விண்ணப்பிக்கக்கூடிய **நான்கு** பதவிநிலைகளைப் பெயரிடுக.

(iii) செய்திப்பத்திரிகையொன்றில் செய்திப் புகைப்படங்களைப் பிரசுரிப்பது தொடர்பிலான **நான்கு** முக்கிய அம்சங்களை விளக்குக.

(iv) வெகுசனத் தொடர்பாடலின் முக்கிய செயற்பாடுகள் **நான்கினையும்** பெயரிட்டு, அவற்றுள் **இரண்டினை** விவரிக்குக.

**7.** (i) தொடர்பாடல் செயன்முறை மாதிரியில் முதன்முதலில் 'தடை' அல்லது 'இரைச்சல்' என்பதைச் சுட்டிக்காட்டியோர் யாவர் ?

(ii) ஹரோல்ட் லாஸ்வெல்லின் தொடர்பாடல் வரைவிலக்கணம் தொடர்பிலான **நான்கு** அடிப்படைக் கூறுகளைப் பெயரிடுக.

(iii) மின்னஞ்சல் தொடர்பிலான **மூன்று** முக்கிய அம்சங்களைத் தனித்தனியாக விளக்குக.

(iv) செய்திக்கு இருக்கவேண்டிய குணாம்சங்கள் (news values) **நான்கினைத்** தனித்தனியாக விளக்குக.

* * *